## நாணயச் சபை

## இலங்கை மத்திய வங்கி

**2018 செத்தெம்பர் 28** **வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** **2018இன் 06ஆம் இலக்கம்**

---

### உந்து ஊர்திகளின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) என்பனவற்றின் கீழ் விடுக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி இறக்குமதியினையும் அதன் விளைவாகச் செலாவணி வீதத்தின் மீது தோன்றும் மோசமான தாக்கத்தினையும் கட்டுப்படுத்தும் நோக்குடன், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் 2018 ஒத்தோபர் 1 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொண்டது.

1. பின்வருவன உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் பணிப்புரை 2.1 இற்குப் பதிலீடாக அமையும்.

   உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியினாலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் மறுஅறிவித்தல் வரை அத்தகைய ஊர்திகளின் சந்தைப் பெறுமதியின் பின்வரும் சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

   (i) முதற்பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதிக்கு இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பதிவு செய்யப்படாத ஊர்திகளைப் பொறுத்தவரை;

**அட்டவணை 1 - பெறுமதிக்கான கடன் விகிதம்**

| ஊர்தி வகை | உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊர்தி வகுப்பு | மின்னியல் ஊர்திகள் | ஏனையவை |
|---|---|---|---|
| வர்த்தக ஊர்திகள் | சி1, சி, சிஈ, டி1, டி, டிஈ, ஜி1, ஜி, ஜே | 90% | 90% |
| உந்து கார்கள், கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) மற்றும் வான்கள் | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 90% | 50% |
| முச்சில்லு வண்டிகள் | பீ1 | 90% | 25% |
| வேறு ஏதேனும் ஊர்திகள் | ஏ1, ஏ, பீ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட இலகு பாரவண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் | 90% | 70% |
| கலப்பு உந்து கார்கள், வான்கள் மற்றும் கடுவழிப்பயன் ஊர்திகள் (எஸ்யுவிகள்) | பீ (இலகு பார வண்டிகள் மற்றும் ஒற்றைக் கூடார ஊர்திகள் தவிர) | 50% | |

   (ii) முதற்பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் கூடுதலான காலம் இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் தொடர்பில் 70 சதவீதம்.

2. இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சலுகை ரீதியான நியதிகளின் மீது உந்து ஊர்திகள் அனுமதிப்பத்திரத்தினை வழங்குகின்ற திட்டத்தின் கீழ் உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதங்களைத் திறப்பதிலிருந்து மறுஅறிவித்தல் வரை விலகியிருக்கவும்.

**முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்